Reg. No. M.

தனிப்பிரதி 1 அணா

ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.

REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité

VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.

JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI

வித்தகம்

வியாழக்கிழமை தோறும் வெளிவருவது

நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.— குறள்.

VOL, I. { புதுவை, ஸ்ரீமுகஷூ மார்கழி மீ உக உ (4—1—34) } No. 6

திருவாய்மொழி

என்னை முற்றுமுயிருண் டென்மாயவாக்கையிதனுள்புக்கு
என்னைமுற்றும்தானேயாய் நின்றமாயவம்மான்சேர்
தென்னன்திருமாலிருஞ்சோலைத்திசைகைகூப்பிச்சேர்ந்தயான்
இன்னம்போவேனேகொலோ என்கோலம்மான்திருவருளே.

என்கோலம்மான்திருவருள்க ளுலகுமுயிரும்தானேயாய்
நன்கென்னுடலம்கைவிடான் ஞாலத்தூடேநடந்துழக்கி
தென்கோள்திசைக்குத்திலதமாய்நின்ற திருமாலிருஞ்சோலை
நங்கள்குன்றம்கைவிடான் நண்ணாவசுரர் நலியவே.

வானேதருவானெனக்கா யென்னோடொட்டி
ஊனேய்குரம்பை யிதனுள்புகுந்து—இன்று
தானேதமோற்றவினைகள் தவிர்த்தான்
தேனேபொழில்தென் திருப்பேர்நகரானே.

உ
திருவருள் துணை.

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்.)

வித்தகம்

புதுவை,
ஸ்ரீமுக மார்கழி மீ 21உ

வேதாகமங்கள்

உண்மையாகிய சத்தியத்தை, சத்தியமாகிய மறையை, மறையாகிய வேதத்தை, வேத வடிவாகிய கடவுளை அநுபவமாகக் கண்ட தத்துவப் பெரியார் திரு வாக்குக்களை மறைகளெனப்படும். இவை அரிய பெரிய இரகசியங்களை மறைபொருளாக — கௌணமாகக் கூறுதலால் மறை எனப்பட்டன. ஆசான் இன்றி இவற்றின் உண்மைப் பொருளை அறிதல் முடியாத காரியம். இது பற்றியே இம்மறைகளுக்கு — இவற்றின் பொருளை அறிவதற்கு அதிகாரிகள் இனார் என்பதும் கூறப்பட்டது. இந்நூல்களின் உண்மைப் பொருளை அறியும் பக்குவமில்லாதார் பலர் இவற்றைத் தாங்களே யன்றி ஏனையோர் படித்தல் கூடாது என்று கூறுவர். இவ்வாறு கூறுவோர் இந் நூல்களால் அடையும் உண்மைப் பயன் யாதும் உண்டோ என்றால், ஒன்றும் இல்லை என்பது வெள்ளிடை.

உண்மையாகிய சத்தியமே மறை. மறையே வேதம். வேதமே ஆசான் —கடவுள். இம் மறையே "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய வேதவித்து—கடவுள் அநாதி. வேதமும் அநாதி. அநாதியான கடவுளிடத்திலிருந்து வந்தமையால் வேதமும் அநாதி. ஆதலால் கடவுளே வேதம் என்பது — வேத வடிவே கடவுள் என்பது வெள்ளிடை. இதனை எப்படி ஏட்டில் எழுதி வைக்க முடியும்? இது ஒரு பாஷையில் வழங்குவது எப்படி? நான்மறையைக் கண்டோர் அவற்றைப் புகழ்ந்தார்கள்—போற்றினார்கள். அது ஆனார்கள். இவர்களே தத்துவப் பெரியார்கள்— இருடிகள்— முனிவர்கள் — சித்தர்கள்— மெய்யடியார்கள். இவர்களே ஞாலம் அமலமடையப் பெற்று அதனோடு உலகு கண்டிட மறைந்து உண்மை முத்தியடைந்தவர்கள். வேதம் ஆகமம் அங்கம் முதலியன வெல்லாம் அரிய பெரிய தத்துவங்களே யாகும். இது பற்றியே இவற்றை அநுபவமாகக் கண்டோர் தத்துவப்பெரியார் எனப்பட்டனர். உலக நூல்களைக் கற்ற வித்துவான்களுக்கு இவ் வேதங்களின் உட்பொருள் விளங்குவது மா கடினம். பின் வரும் திருவாக்குக்களும் இவ் வுண்மையை நன்குபுலப் படுத்தும் :

சுந்தரர் தேவாரம்.

அரவொலியாகமங்கள் அறிவார் அறி தோத்
[திரங்கள்
விரவியவேதவொலி விண்ணெலாம்வந்தெ
[திர்க் திசைப்ப
....

ஞானசம்பந்தர்.

....
நயங்குசோதி சாமவேதா காமனைக் காய்ந்
[தவனே
மயங்குகின்றேன் வந்துநல்காய் வலி வல
[மேயவனே.

திருவாசகம்.

இன்பான் மொழிக்கிள்ளாய் எங்கள்
[பெருந்துறைக் கோன்
முன்பான் முழங்கு முரசியம்பாய்—அன்
[பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத்
[தோங்கும்
பருமிக்க நாதப் பறை.
(ஷை—திருத்தசாங்கம், செ. 8.)

திருமந்திரம்,

ஆடிய காலி லசைக்கின்ற வாயுவுந்
தாடித் தெழுந்த தமருக வோசையும்
பாடி எழுகின்ற வேதாக மங்களும்
நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே.
(ஷை 8-ம் தந்திரம், கின்மலா வத்தை.
[செ. 14.)

ஆறங்க மாய்வரு மாமறை யோதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவு செய்தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே.
(ஷை பாயிரம் வேதச் சிறப்பு. செ. 5.)

இவ்வாறு வரும் பிரமாணங்கள் பல. அமயம் நேர்ந்துழி நேர்ந்துழி அவை எடுத்துக்காட்டி விளக்கப்படும்.

ஆகமம் என்பது யாது? ஆ என்பது பசு; க என்பது பதி, ம என்பது பாசம் எனப் பொருள்படும். ஆ=சிவஞானம், க=மோட்சம், ம=மலநாசம் எனப் பொருள் கூறினும் ஆம். ஆதலால் ஆகமம் என்பது ஆன்மாக்களது மலத்தை நாசம் பண்ணி அவைகளுக்குச் சிவஞானத்தை அளித்து அவைகளை வீடடையச் செய்வது எனப்பொருள் படும். இந்நூல் எங்கே? சீவர்கள் யாவரும் வீடடைதற் கேற்றவாறு அவரவர் சடபேதம் கர்மபேதங்களுக் கேற்ற அளவிறந்த சாதகங்கள் எல்லாம் உல

கில் நூல்களாக வழங்க முடியுமா? இவைகள் நூல்களாக வழங்க முடியுமாயின், சீவர்கள் யாவருக்கும் உரிய சாதகங்கள் காணப்படவேண்டும் அன்றோ? மணிவாசகர் முதலியோர் இன்ன இன்ன வேதாகம கட்டங்களை —விதிகளை அநுட்டித்துத் தமது தூலத்தை அமலமாக்கி — சூக்குமமாக்கி அதனோடு மறைந்து முத்தியடைந்தார்கள் எனவும், அவ்வாறே மற்றைய சீவகோடிகளும் இன்ன இன்ன விதிகளை அநுட்டித்து முத்தியடைய வேண்டுமெனவும் உலகில் வழங்கும் நூல்களில் கூறப்பட்டிருத்தல் வேண்டும் அன்றோ? இவ்வாறு கூறப்பட்டதுண்டா? ஒரு சீவனுக்குரிய சாதகமாவது கூறப்பட்டிருக்கவில்லையே! இதனால் போந்த பொருள் யாது? சீவர்கள் சடபேதம் கர்மபேதங்களுக்கேற்ற சாதக யோக விதிகள் காலந்தோறும் அவ்வச்சீவருக்கே சற்குருநாதனாகிய இறைவனால் அருளப்படுவன வன்றி, அவைகள் எப்பாஷையிலும் உலகில் நூல்களாக வழங்கப்படுதல் இல்லை என்பதாம். ஆகவே, வாய்மையான ஆகமம் யாவை எனில், கூறுதும் :

ஆகமங்கள் என்பன சங்கியைகள்—எண்களாகும். அஃதாவது, பக்குவியானவன் தன் சரீரத்தில் வித்தாயிருக்கும் ஆசானை "உற்ற ஆக்கையின் உறு பொரு"ளை உற்பனஞ் செய்தற்கு — எத்தனையோ பயில்வுகளைப் பயிலுதல் வேண்டும். அப்பயில்வுகளுக்கு இத்தனை என எண் உண்டு. ஆசானை உற்பனஞ் செய்து முன்னிலையில் தெரிசிக்கவேண்டுமானால், இன்ன இன்ன சூக்கும நிறையுடைய பயில்வுகளைப் பயிலுதல் வேண்டும் எனவும், அந்நிறைகளுடைய பயில்வுகள் இத்தனை எண் உடையன எனவும், அவ்வெண் பூர்த்தியானால், அணுவாயிருக்கும் ஆசானாகிய வித்து விளைவேற்றப்பட்டு, சித்தாயிருந்தது அசித்தாய்த் தோய்ந்து முன்னிலைப்படும் எனவும் வேதம் முறையிடுகின்றது; வேதமாகிய ஆசான், ஆசானாகிய சிவம் முறையிடுகின்றது. மேலேகூறப்பட்ட எண்கள்தாம்—ஆசான் விதிகள் தாம் ஆகமங்கள். இவை அளவுபடுவனவாகா. பின் வரும் திருமூலர் திருவாக்கும் இவ் உண்மையை நன்கு புலப்படுத்தும் :

அண்ண லருளா லருளுந்திவ் யாகமம்
விண்ணி லமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணி லெழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலு நீர்மே லெழுத்தது வாமே.

(பாயிரம், ஆகமச்சிறப்பு. செ. 4)

ஏனைய அங்கம் முதலியனவும் இவ்வாறே அறியப்படவேண்டும். அமயம் நேர்துழி இவை விரிவுற விளக்கப்படும்.

இவ் உண்மைகளையும் தான் பிறவற்றையும் தான் முனிவர்கள்—சித்தர்கள் — மெய்யடியார்கள் கௌணமாகவும் கற்பனைக் கதை ரூபமாகவும் உருக்கமான தோத்திரங்களாகவும் திருவாய் மலர்ந்தருளினார்கள். இவற்றின் உண்மைப் பொருளை அறிவது என்றால், அவர் போன்ற பக்குவர்க்கே யன்றி ஏனையோர்க்கு முடியுங்காரியமாகுமா? இவற்றின் உண்மைப் பொருளை அறியும் ஆற்றலும் காதலும் இல்லாத சிலர் இவற்றை ஏளனஞ் செய்வது போல இவற்றிற்குத் தமதுகல்வி வன்மையால் பொருள் கூறுகின்றனர்— உரை எழுதுகின்றனர். அவ்வளவோடும் அமையாது தாங்கள் எழுதும் உரைகளுக்கும் தெய்வத்தன்மையைக் கற்பித்து மெய்யடியார்கள் அருளிய நூல்களில் சேர்த்துவிட்டார்கள். இதனால் பலர் உண்மை இன்னது எனப் பகுத்தறிய முடியாமல், சொல்லுக்கும் செயலுக்கும் எளிதான மார்க்கம் எதுவோ அதனைச் சிருட்டித்து வெளிப்படுத்தி அதனையே உலகமாக்களுக்கும் போதித்துச் சாதலடைந்தனர்— அடைகின்றனர். செத்த பின்பு மோட்சத்துக்கும் போய்விடுவதாகக் கூறி அமைகின்றனர்.

வேதம் ஆகமம் என்னும் நாமரூபங்களோடு உலகில் வழங்கும் நூல்கள், சீவர்கள் அடையவேண்டிய உண்மை நெறி ஒன்று உண்டு என, அச்சீவர்கள் அதனை நாடிக் குருமுகமாக அதனை அடையச்செய்யும் முகத்தால் பயனுடையனவேயாகும் அன்றி முத்தியடைதற் கேற்ற சாதகங்களை அந்நூல்கள் கூறவில்லை — கூறமுடியாது—கூறமாட்டா என்பது வெள்ளிடை.

தத்துவப் பெரியாராகிய இருடிகள் —முனிவர்கள்—சித்தர்கள்—மெய்யடியார்கள் அருளிய நூல்கள் வியாபகமாகிய ஒலிவரிவடிவமான பாஷைகளில் வெளிவந்துள்ளன. அவை இருக்கு யசுர் முதலியனவும், தேவாரம் திருவாசகம் திருமந்திரம் முதலியனவுமாம். தமிழ் சம்ஸ்கிருதம் என்பன வியாபகமாகிய ஒலிவரிவடிவங்கள்--பாஷா பேதங்கள். தற்காலத்தில் இருக்கு யசுர் சாமம் அதர்வம் என நான்கு வேதங்கள் வழங்கப்படுகின்றன. இவைகளுக்கு முன் தைத்திரியம் பௌடிகம் தலவகாரம் சாமம் என நான்குவேதங்கள் இருந்தன எனவும் கூறுவர். அசபா வேதம் என ஒன்று உள்ளதாகவும் கூறுவர். இதனால் வேதம் ஐந்து எனவும் படும். இந்நூல்கள் ஆதியில் உத்தமர்களால் — சதுரப் பாடுடையவர்களால் — உண்மை நெறி கண்ட பெரியோர்களால்—சிவப்பிரசாதம் பெற்ற இருடிகள் முனிவர்களால் இயற்றப்பட்டன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. பிற்காலத்தில் உண்மை உணராத சிலரால் சிலபல இடைச்செருகப்பட்டும் பிறவாறும் பழுதுகள் ஏற்பட்டன என்பதும் உண்மையே. தமிழ் மறைகள் என வழங்குவனவும் இவ்வாறு பழுதடைந்தமை யாவரும் அறிந்ததொன்றும். இடைச்செருகல்களாகிய ஆபாசங்களைக் களைந்துவிட்டால் அரிய பெரிய விஷயங்களே— உண்மைகளே அவற்றில் காணப்படும். அவ் அரிய பெரிய உண்மைகளும் கௌணமாகவும் நிறை முறையோடு கூடிய உண்மைக்கற்பனை ரூபமாகவுமே காணப்படும். இவற்றின் உண்மைக

ளும் ஆசான் அருள் பெற்ற பக்குவர்க்கே யன்றி ஏனைய உலக மாக்களுக்குப் புலப்படுவன வாகா.

சம்ஸ்கிருதத்திலும் தான், தமிழிலும் தான் உள்ள தத்துவப்பெரியார் பாடல்கள் ஒரே உண்மையையே கூறுவன என்பது பின் வரும் ஔவையார் திருவாக்கானும் நன்கு உணரப்படும்:

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர்தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்.

திருநான்மறை முடிபு என்பது வேதத்தின் உத்தரபாகமாகிய உபநிடதங்கள் — முனிமொழி என்பது வியாசர் அருளிய வேத சூத்திரங்கள். வியாச சூத்திரங்கட்குப் பலர் உரை கண்டாராயினும் அவரெல்லாம் தம்முள் மாறுபட்டுக் கூறினமையே, சூத்திரங்களின் உண்மைப் பொருளை அறிந்து கூறிற்றிலர் என்பதனை நன்கு புலப்படுத்தும். தத்துவப் பெரியாராகிய வியாசர் அருளியநூலுக்கு வித்துவப்பெரியார் பொருள் காண்பதும் முடியாத காரியமே. ஒவ்வொருவர் கொள்கையை—உரையை ஒவ்வோர் சாரார் அபிமானம் பற்றிப் பாராட்டி அமைகின்றனர்.

இருக்கு முதலிய வேதங்களைச் சம்ஸ்கிருத பண்டிதர் சிலர் பலரால் கேட்டறிந்து அவற்றை விநோதார்த்தமாக மொழிபெயர்த்த மேனாட்டு அன்னிய பாஷா பண்டிதர்களும், அவைகொண்டு வேதங்களை ஆராயப் புகுந்த கீழ்நாட்டுச் சைவப் பண்டிதர்களும் அந்நூல்களெல்லாம் சில சாதியார் ஒருவரோடு ஒருவர் விளைத்த பூசல்களையும் இழிவான யாகங்களையும் பிறவற்றையுமே கூறுகின்றன எனவும், உண்மைக் கடவுள் வழிபாடு அவற்றிற் கூறப்படவில்லை எனவும் முடிபு பண்ணிவிட்டார்கள். அவற்றிற் கூறப்பட்ட யாகங்களின் உண்மைகளை அறியாது — அறியமுடியாது அகாவசியகமான கொலைகள் புரிந்து அவ்வேதங்களை இழிவு படுத்தினோரும்—இழிவு படுத்துவோரும் பலர். இவற்றுள், பிரதானமாக மிகப் பழையதான இருக்கு வேதத்தில் காணப்படும் அரிய பெரிய உண்மைகள் அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

இவ் வேதங்களின் உத்தரபாகமாகிய—திருநான்மறை முடிபாகிய உபநிடதங்கள் அங்க லிங்க ஐக்கியம் எனப்படும் சிவாத்துவித சித்தாந்தத்தையே—உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடைதலாகிய உண்மைச் சைவக் கொள்கையையே கூறுவனவாகும். இவ் வுண்மையைப் பெரியநாயகி யருளால் எழுந்த சுத்த சாதகமும் நன்கு வலியுறுத்திக் கூறியமை காண்க:

இருக்குமுன்னான்கின் முடிவிலெண்ணான்
காயிலங்கிடுமுப நிடமவையே
வருக்கமுமிரண்டாம்பூருவமென்றும்
வயங்கிடு முத்தரமென்றும்
சுருக்கமதின்றியத்தியான்மீகஞ்
சொற்றிடும் பூருவபாகந்
திருக்குகளின்றியங்கலிங்கையிக்கஞ்
செப்பிடு முத்தர பாகம் 3.

பத்தியாலடையு மங்கலிங்கயிக்கம்
பகர்ந்திடு முபநிடமின்றும்
அத்தினலிவையி லடக்கமதென்ப
ரதைவிளக்கிடுந் தொர்தத்தசியே. 4.

வேதாந்தம் எனப்படும் உபநிடதங்களும் ஆகமாந்தம் எனப்படும் சிவாத்துவித சித்தாந்தமும் ஒரே முடிபையே உடையன. உலகில் நூல்களாக வழங்கும் இவைகள் வாய்மையான வேதாந்தம் என்னும் நாதாந்தத்தையும், சித்தின் அந்தமாகிய வாய்மையான சித்தாந்தத்தையும் கண்டு சமரச நிலை பெற்று முத்தியடையும் குருநெறி—சிவநெறி ஒன்று உள்ளது என அதனை நாடும் உணர்ச்சியையே — அவாவினையே உளவாக்குவன வாகும்—உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடைதற்கேற்ற உண்மைச் சாதக விதிகளாகிய உபநிசத்துக்கள், சீவர்கள் சடபேதம் கர்மபேதம் என்பனவற்றிற்கேற்ப அவ்வச் சீவர்களுக்கே எம்பெருமானால் அருளப்படுவன வாகலின், அவை உலகில் நூல்களாக வழங்குதலில்லை. இது பற்றியே,

பத்தியாலடையும் அங்கலிங்கையிக்கம்
பகர்ந்திடு முபநிடமின்றும்.

எனவும் கூறப்பட்டது என அறிக.

ஆகமங்களென உலகில் வழங்கும் நூல்களுள்ளே சிறந்தது "வாதுளம்" என்பர் பெரியார். கந்தபுராணக் காரரும் வாதுளத்தையே முதன்மையுடையது என்றனர். அது பின்வரும் செய்யுளால் அறியப்படும்:

கந்தப் புராணம்.

தத்தமாற்றங்கணிறு வியசமயிகள் பலரும்
கத்துபுன் சொலைவின வினரவன் செயல்
[காணார்
சுத்தவாதுள முதலிய தந்திரத் தொகுதி
உய்த்துணர்ந்திடு நீரரேயொரு சிறிதுணர்
[வார்.

(ஷை சூரன் அமைச்சியற் படலம்.)

இவ் வாதுளாகமத்தில் சிவாத்துவித சித்தாந்தமே உண்மையானது என்று கூறப்படும். பின்வரும் சுத்த சாதகச் செய்யுளும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்:

ஆகம மிருபத்தெட்டினின் முடிவா
மாகமமாம் வாதுள மதனில்
ஏகமென்றியம்பு மறையனுசரித்தே
யியம்பிடு நான் மறையவையிற்
பாகமதுறுஞ் சாமத்தின் முன்னெறியும்
பகர்சிவாத்து விதவின்னெறியும்
யூகமதிலங்க வியம்பிடுமதனு
ளுண்மைசாமத்திவின் முடிவே.செ.6.

சித்தாந்த சிகாமணி என்னும் அரிய பெரிய சம்ஸ்கிருத நூல் சிவப்பிரசாதம் பெற்ற ஸ்ரீ ரேணுக கணநாதர் என்பவரால் அருளப்பட்டது." இந்நூல், புலவர் பெருமானாகிய துறைமங்கலம் சிவப்பிரகாசரால் தமிழில் மொழிபெயர்த்துப் பாடப்பட்

டுள்ளது. இந்நூல் வேதாகம சாரமாய் அங்க லிங்க ஐக்கியம் எனப்படும் உண்மை முத்தி நிலையையே நுதலியது. சுத்தசாதகம் போல வெள்ளிடை மலையாக யாவரும் எளிதின் உணருமாறு கூறுவிடினும், அந்நூல் கூறிய உண்மை முத்தியையே பல்லாற்றானும் உறுதிப்படுத்துகின்றது. அமயம் சேர்ந்துழி விரிவுறக் கூறப்படும். வீர சைவம் என வழங்கும் சிவாத்வைதமானது பொதுவாகச் சகல ஆகமங்களின் உத்தர காண்டங்களிலும் சிறப்பாக வீராகம வாதுளாகம பூர்வோத்தர காண்டங்களிலும் கூறப்பட்டுள்ளது என்பர். ஆகமாந்தமாகிய இச்சிவாத்வைதமே, வீரசைவம், சுத்தாத்வைத சைவ சித்தாந்தம் சிவ சித்தாந்தம் முதலிய பல திருநாமங்களால்வழங்கப்படுவதாகும். இதுவே அநாதியாக உள்ளது. தத்துவமசி வாக்கியப் பொருள் அங்க லிங்க ஐக்கியமே என்பது பின்வரும் வாதுளாகம சுலோகத்தானும் நன்கு பெறப்படும்:

"சிவ ஏவ ஸ்வயம் லிங்கமாத் மைவாங்
[கம் பவேத் கலு
த்யோ: சிவாத்மதோ; ஸம்யக் யோக
[ஸம்யோக ஏவ ஹி
லிங்கம் தத்பத மாக்யாகம் அங்கத்வம்
[பத மீரிதம்
ஸம்யோகோ—ஸிபதம் ப்ரோக்தம் அங
யோரங்கலிங்கயோ",

வேதாக மோக்த சைவ சித்தாந்தமாகிய—ஆகமாந்தம் எனப் புகழப்பட்ட இச்சிவாத்துவித சித்தாந்த உண்மை பிற்காலத்தவர் சிலரால் "அயிக்க வாதக் கொள்கை" உடையதெனக் கண்டிக்கப்படவே, அங்க லிங்க ஐக்கியம் எனப்படும் உண்மை முத்திநிலை பலர்க்கும் மறை பொருளாயிற்று. சைவ சமயத்தை விளக்கிக் காட்ட முன்வந்தவர் பலர், சைவ சமய பரமாச்சாரியர்களும் பிறரும் உலகு கண்டிடத் தாலத்தோடு மறைந்து அடைந்த உண்மை முத்தி நிலையைக் குறித்து—அச்சமயாசாரியர் தம் சொல்லாலும் அரும் பெருஞ் செயலாலும் நிலைநாட்டிய சத்திய நெறியைக் குறித்து யாதும் கூறுது விட்டனர். சிவாத்துவித சைவராகிய வீரசைவரெனத் தற்காலம் வழங்கப் படுவோர்க்கும், வீரசைவ மடாதிபதிகளுக்கும் இவ் அரிய பெரிய உண்மை (குமார தேவரால் வெள்ளிடை மலையாகக் கூறப்பட்டும்) மறை பொருளாய் விட்டமை வியப்பேயாகின்றது.

தற்காலம் சைவ சித்தாந்தமென வழங்கும் கொள்கை-தற்காலச் சைவ சமயம் ஒரு வகையானது போலும்!

திருமந்திரப் பதிப்பு ஒன்றனுக்கு நூன்முகம் எழுதியவரும், தற்காலச் சைவ சித்தாந்த நூல்களிலும், சம்ஸ்கிருத ஆகம நூல்களிலும் வல்லவருமாகிய, வேதாரண்யம் ப்ரம்ஹ ஸ்ரீ. Dr. V. V. இரமண சாஸ்திரிகள் Ph. D., F. R. A. S. அந்நூன் முகத்தில், [தற்காலச் சைவ சித்தாந்தம் ஆகமத்தின் ஒரு பகுதியைத் தழுவி விளங்குகின்றதென ஒருவகையாகக் கூறி,] அதன் இறுதியில்,
"ஆகமாந்தம் என்னப்பட்ட சிவாத்துவித
"சித்தாந்தச் செம்பொன்னின் வரலாற்
"றையும் உரிமையையும், கோட்பாட்
"டையும், திருமந்திரத் தேனின் ஏனைய
"நுண்ணிய சுவைகளின் உட்பெருமை
"களையும் உண்மைகளையும் அணிவகுத்
"துரைத்தல் எமக்கு உவப்பேயாயினும்,
"சிறிது தாழ்த்து மற்றோர் தருணத்து
"மிக விரிவாய் எழுத விருக்கின்றேமாத
"லால், யாம் இம்மட்டடன்றண்டு நிறுத்திக்
"கொள்ளலானோம்." எனக்கூறி அந்நூன் முகத்தை முடித்திருக்கின்றார்கள்.

இதனால் சிவாத்துவித சித்தாந்தமே உண்மைச் சைவ சமயம் என்பது அவர்கள் கருத்துப்போலும்! அதனையே ஆகமாந்தம் (ஆகம + அந்தம்) எனக் கூறுகின்றார்கள். உண்மை முத்திநிலையைக் கூறும் சுத்த சாதகமும் சிவாத்துவித சித்தாந்தமே என்பதில் ஐயமில்லை போலும்!

அங்கலிங்க ஐக்கியம் என்னும் தத்துவமசி வாக்கியப் பொருளாகிய உண்மை முத்திநிலையைக் கூறும் சிவாத்துவித சைவ சித்தாந்தமே உண்மைச் சைவக் கொள்கை என்பது பின்வரும் திருவாக்குக்களாலும் நன்கு புலப்படும்:

திருமந்திரம்

தொம்பதந் தற்பதந் தோன்று மசிபத
நம்பிய சீவன் பரன்சிவ னய்திற்கு
மம்பத மேலைச் சொரூபமா வாக்கியஞ்
செம்பொருளாண்டருள்சேர்நந்திதானே.

(மேற்படி 8-ம். தந். 11-வது. மூப்பதம். செ.5)

தன்மேனி தற்சிவ லிங்கமாய் நின்றிடுந்
தன்மேனி தானுஞ் சதாசிவ மாய்நிற்குந்
தன்மேனி தற்சிவன் றற்சிவா னந்தமாந்
தன்மேனி தானகுந் தற்பரந் தானே

(மேற்படி 7-ம் தந். 4-வது சதாசிவ லிங்கம் செ. 21)

அப்பினிற் கூர்மை யாதித்தன் வெம்
[மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த தவ்
[வுரு
அப்பினிற்கூடிய தொன்றுகுமாறுபோற்
செப்பினிச் சீவன் சிவத்து ளடங்குமே.

(மேற்படி 11வது தந். 1வது உபதேசம் செ. 24.)

சீவ னென்னச்சிவ னென்ன வேறில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே.

(மேற்படி 7ம் தந் 23-ம் போதன் செ. 1.)

வேதாந்த தொம்பத மேவும் பசுவென்ப
நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி
போதாந்த தற்பதம் போயிரண் டயிக்
[கியஞ்
சாதா ரணஞ்சிவ சாயுச்சிய மாமே.

(மேற்படி 8ம் தந்.5-வது ஆறந்தம்செ.23.)

திருவாசகம்.

நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப் பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்
செய்து நகயின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத்துகளறுத்
தெழுதருசுடர்ச்சோதி
ஆக்கி யாண்டு தன்னடியரிற் கூட்டிய
அதிசயங் கண்டாமே.

(மேற்படி அதிசயப்பத்து செ. 8.)

வாழ்த்துப்பா

இலங்கை — திருக்கோணமலை.

சைவத் திருவாளர். சி. வேலுப்பிள்ளை அவர்களால்
இயற்றப் பெற்றது.

சத்தியம் வாய்மை பொறை அருள் சீலம் சசல உயிர்
வைத்திடு ஆர்வம் தயை அன்பு நேர்மை வகுத்த பல
உத்தம நான்முறை யாருமுணர உரை புதுவை
வித்தகனே நினைக் கண்டால் அஞ்ஞான இருளறுமே.

தலையாய அறம்

(4-ம் வாரத்தொடர்ச்சி)

ஆலம் அமுதமானல் காலனை வென்றிடலாம் என்பது வேத உண்மை. "ஆலமுண்டமுதே மிகத்தேக்குவர் காலகாலர்........ ...." என்பது

அப்பர் தேவாரம் (திருக்கடவூர் மயானம் திருக்குறுந்தொகை. செ. 3)

நித்தியத்துவம் என்னும் அமிர்தத்துவம் இதுவே என்க. தென்புலமே யமபுரமாம். வினை ரூபங்களாகி நின்று நம்மை அவச்சலனம் அடைவித்து, சாதலைத்தரும் அசுத்த நிறையை ஆக்கமுறுவிக்கும் விஷகுண மலிந்த முன்னிலைகளே தென்புலத்தார் என்னும் யமபடர் என்க—காலதூதர் என்க. பின்வரும் தத்துவப் பெரியாராகிய ஆழ்வார் திருவாக்கும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

"வந்தான் வந்தென் நெஞ்சிடங்கொண்
[டான்
மற்றோர் நெஞ்சறியான் அடியேனு
[டைச்
சிந்தையாய் வந்து தென்புலர்க் கென்னைச்
சேர்கொடானிது சிக்கெனப்பெற்
றேன்........."

(பெரியதிருமொழி 7-ம் பத்து. 3- வது, சினவில். செ. 3)

முன்னை வினையகல மூங்கிற் குடியமுதன்
பொன்னங்கழற் கமலப் போதிரண்டும்—
[என்னுடைய
சென்னிக்கணியாகச் சேர்த்தினேன் தென்
[புலத்தார்க்
கென்னுக்கடை வுடையேன்யான்"

பிதுரரைத் தந்தை வழியினர் என்பது உலகியல். இத்தந்தையர் எங்குளர்? எவர் அறிவர்? உலகத்தந்தை தாயார் நமது பாசத்தொடர்பேயன்றி, இருவினைசொரூபமாய்த் தோன்றி மறைந்து தோன்றுகிற நாம ரூபங்களேயன்றி வேறு என்னை? உண்மைத் தந்தை தாயார் யார்? நம்மிலும் நமக்கு இனியார் இவரே அல்லவா? இவரை நாம் அறியவேண்டியது, அடையவேண்டியது அவசியம் அல்லவா? புத்திரன் யார்? புத்திரன் என்றால் நரகத்திற் செல்லவிடாது காப்பவன் என்கின்றனர். "புத்" என்றால் நரகம் என்கின்றனர். புத்துயிர் என்றால் புதிய பிறப்பு அல்லவா? "நின்மலரடிக்கே கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய் நின் குறிப்பறியேன்" (திருவாசகம்) என்னும் திருவாக்கில் "கும்பி" என்பது என்னை? "சாண்கும்பி" என்பார் கருத்தென்னை? பிறப்பும் இறப்பும் நரகம் எனப்படாவோ? மரணவேதனை யமவேதனை அல்லவா? புத்தேளுலகு என்றால் தேவருலகு என்கின்றனர். "புத்" என்றால் அசுர உலகமாகாதோ? அசுர உலகம் எது? தேவருலகம் எது? அந்தோ! உலகம் விபரீதத்தில் ஆழ்ந்து கிடக்கின்றது. இந்த விபரீதத்திற்றன் உண்மைகாணவேண்டும். இவ்வியாபகமே வியாபகமாகிய மாயையே "புத்" என்றால் பொருந்தாதோ?

"நரகொடு சுவர்க்க நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை"

(திருவாசகம்) என்னும் சுருதியின் பொருள் யாது? இப்புத்தினின்றும் வெளியேற வேண்டாவோ? வெளியேறுவது எங்ஙன்? வெளியேறினலன்றோ புத்திரப்பேறு கிடைத்ததென்று கூறலாம்—ஞானக்குழந்தை பிறந்ததென்று கூறலாம். அப்பொழுதன்றோ "தந்தை தாய்ப் பேண்" என்னும் வேத உண்மை உறுதிப்படும். "தந்தை ஆர்? தாய் ஆர்? உடன் பிறந்தார் தாரம் ஆர்? புத்திரர் ஆர்? தாம்தாம் ஆரே? வந்தவாறு எங்ஙனே? போமாறு ஏதோ? (இது) மாயம் ஆம். இதற்கு ஏதும் மகிழவேண்டாம்." என்றார் நமது அப்பர். "யாம் ஆர்? எமது ஆர்? பாசம் ஆர்? என்ன மாயம்?" என்றது மாணிக்கம். ஆதலால் உண்மைத்தந்தைதாய் பெண்டிர் மக்கள் சுற்றம் காண்பது எளிதன்று. இது காறும் கூறியவைகளால் "தென்புலத்தார்" என்பதன் உண்மைப் பொருள் ஒருவாறு உணரத்தகும்.

தெய்வம்:— தெய்வம், ஊழ், விதி, இருவினை, கன்மம் என்பன ஒன்றே. தென்புலத்தார் என்னும் சஞ்சிதத்தின் காரியமாகலின் ஊழ் என்னும் தெய்வம் அதன்பின் வைக்கப்பட்டது. சிவர்கள் மதிமுயற்சிக்கு ஏற்ற பயனைத்தெய்வமே ஊட்டிவைக்கும். சிவமுயற்சியால் வினைமாறினல் மாற்றமடைந்த அவ்வினையே தெய்வமாகிப் போந்து அதன்பயனையும்ஊட்டிவைக்கும். இதனல் நல்வினைக்கும் தீவினைக்கும் தெய்வமே சாட்சி என்பதன் உண்மை நன்கு புலப்படுகின்றது. கடவுள் அவரவர் வினைக்கேற்பக் குருவாய் விளங்குவார். இவ் உருவமே கடவுளுருவம் என அறிக. இவ் உண்மையை அறியாதவர் கடவுளைக் காணமுடியுமா? காட்டமுடியுமா? என்று நாத்திகம் பேசுகின்றனர். ஆங்கில மேதாவிகளுள்ளும் இவ்வுண்மையை உணர்ந்தோர் உளர் என்பது பின்வரும் பிரமாணத்தால் அறியக் கிடக்கின்றது. அது "நல்லனவும் தீயனவுமாகிய நமது கர்மங்களே நமது தெய்வங்கள். அவைகளே நம்மை விடாது தொடர்ந்து வருகின்ற விதி என்னும் நிழல்கள்" என்பது.

"Our acts our angels are or good
, or ill
Our fatal shadows that walk by
us still"
(Fletche)r

இவ்வாறு வரும் பிரமாணங்கள் பல. அவற்றைத் தத்துவப் பெரியார் பாடல்களில் கண்டு தெளிக. விரிப்பிற் பெருகும். வேதாகமோக்த சிவாத்துவித சித்தாந்த உண்மைகள் அமயம் நேர்ந்துழி மேலும் விளக்கிக் கூறப்படும்.

இதுகாறும் கூறியவைகளால் வேதாகமங்கள் என வழங்கும் நூல்களும், திருவாசகம் திருமந்திரம் முதலியனவும் ததலிய அரிய பெரிய உண்மை அங்க லிங்க ஐக்கியம் எனப்படும் உண்மைச் சைவக் கொள்கையாகிய சிவாத்துவித சித்தாந்தமே என்பதும் பிறவும் ஒருவாறு உணரப்படும்.

வினைக் கூட்டமாகிய மும்மலங்களே தெய்வச் சொரூபம் எனவும், இருவினை சொரூபமாகிய அத்தெய்வம் என்னும் ஊழால் நமது எண்ணமாகிய இச்சை பூர்த்தியடைவது முடியாத காரியம் எனவும் நன்குணர்ந்து, மதிமுயற்சி என்னும் மதி வைராக்கியத்தைக் கடைப்பிடித்து, தனக்குரிய நிறையளவால் நித்திய நிறையை அணு அணுவாகத் தழுவி ஒழுகிவருங்கால், நல்வினை என்னும் மதி விளைந்து விதி வினையை அழித்துவிடும். அஃதாவது "முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்" என்பது. பின் வரும் தேவர் வாக்கும் மதி வினையால்விதிவினையை வெல்லலாம் என்பதனை நன்கு உறுதிப்படுத்துகின்றது.

"ஊழையும் உப்பக்கங்காண்பருலைவின்றித்
தாழாது ஞற்றுபவர்"

(தொடரும்.)

"வித்தகம்"
வருட சந்தா விபரம்.
முன் பணம்
இந்தியா, பர்மா, சிலோன் ரூ.3-0-0
மலாயா, சிங்கபூர், சைகோன் ரூ.4-0-0
வித்தக நிலையம்,
புதுச்சேரி.

தமிழ் அன்பர் மகாநாடு.

மகாநாட்டிற்கு புதுவைத் தமிழன் செய்யும் விண்ணப்பம்.

தமிழ் அன்பர்களே!

தாங்கள் நடத்திய மகாநாட்டின் நடவடிக்கைகளை புதுக்கோட்டை "ஜனமித்திரன்" என்னும் வாரப் பத்திரிகையில் கண்டு உவகையுற்றேன். எத்தனையோ தீர்மானங்களை ஒரு நொடியில் நிறைவேற்றிவிட்டு "தமிழ் நெடுங் கணக்கில் சீர்திருத்தம்" என்ற அத்தியாயத்தை மாத்திரம் ஆலோசனைசெய்து ரிப்போர்ட் செய்வதற்காக ஒரு தனிக் கமிட்டியை நியமித்து விட்டீர்கள். இக் கமிட்டியால் ஆம் பயன் என்னை? நெடுங் காலத்துக்கு முன், அகத்தியன் என்பவரும் "பழைய நூல்" எனப் பொருள் பயக்கும் "தொல்காப்பியம்" யாத்த கிழவனும் 216 எழுத்துக்களை ஏற்படுத்தி விட்டனர். அக்காலத்திலோ அவர்கள் மாம்சங்களைத் தின்பவராகவும், கள் குடியுடையவராகவும் இருந்திருக்கக் கூடுமோனதால், அவர்கள் சரீரங்கள் அதிக தடித்தவுடையனவாகவும், அதற்கேற்ற நீர்மையுடைய மூளைகளையுடையனவாகவும் இருந்திருக்க ஆம் என்று யூகிக்க இடந்தருகின்றது. ஆதலால் அவர்கள் 1-வது சைவர்களுமல்ல 2-வது சரீரவன்மையால் சளைப்பின்றி 216 எழுத்துக்களை கட்டிக்கொண்டு அழுதனர்—தற்காலமோ, யாங்கள் சைவர்கள், அதாவது மரக்கறி மாத்திரம் உண்பவர்கள், எங்களுக்கு இந்த 216 எழுத்துக்களை உச்சரிப்பதற்கே பெருமூச்சுவிடவேண்டியதாயிருக்கிறது. ஆதலால் எங்களுக்கு உயிரெழுத்துக்கள் 12 போதுமானவை.

தயவுசெய்து இந்தப் பிரேரணையை தனிக் கமிட்டியார் பரிசீலனை செய்யவேண்டிய அவசியமின்றி, ஏக மனதாய் ஆமோதித்து ரிப்போர்ட்டை பூர்த்தி செய்துவிடுமாறு அங்கத்தினர்கள் திவ்ய திருவடிகட்கு நமஸ்காரம் செய்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

புதுவை பச்சைத் தமிழன்.

"வித்தகம்"
பெற்ற
மதிப்புரை.

வித்தகம்:—யாழ்ப்பாணத்துத் தென்கோவைத் தமிழ்ப் பண்டிதர் திரு.ச. கந்தையபிள்ளையவர்களை ஆசிரியராகக்கொண்டு, புதுச்சேரியிலிருந்து வெளிவரும் செந்தமிழ் வாரத்தாள் இதன் முதற்பகுதியின் முதற்றேருகுதி வரப்பெற்றேம். திருவருளைத் துணைகொண்டு, தெய்வ மணங்கமழும் திருவாசக பாமலர்களைச் சிரத்திற்சூடி, சாகாக் கல்வியின் உண்மையைத் தமிழ் மக்கட்கு வலியுறுத்தும் அரிய பெரிய கட்டுரையையும், வர்த்தமானங்களையும் கொண்டு விளங்குகின்றது. இதனாசிரியரது தமிழ்ப்புலமைத்திறனும் சைவசமயப்பற்றும் தமிழுலகம் நன்கறிந்ததே. சமய சாத்திரங்களின் உள்ளுறைகளை யறிதற்கு இஃது உற்ற துணையாகும்.

சிவநேசன்.

குறிப்பு:— மேற்கண்ட மதிப்புரை எமக்கு அனுப்பிய பெரியாருக்கு எமது மனமார்ந்த வந்தனம் என்றும் உரிமை யாகற்பாலதே. [ப.—ர்.]

உடம்பின் அருமை பெருமை

[5-வது வாரத்தொடர்ச்சி]

திரிபுரம் எரித்ததும் சிவம் எனும் செம்பொருள் நிற்க—ஊன்ற இடமேது? மால் விடையே இடமாகும். விடையாகிய—சத்தி வடிவமாகிய திருப்பூந்துருத்தியே இடமாகும் என்க.

திருவாசகம்.

கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேருதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்
[பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த
[அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண்
[சாழலோ

(ஷை திருச்சாழல் செ. 15.)

என்னும் மணிவாசக தெய்வச் சுருதிச் செம்பொருளும் இதுவே யாதல் சொல்லாமலே அமையும். இவற்றால் உடம்பின் மெய்ம்மையும் அருமை பெருமையும் கண்டு கொள்க. இத்தன்மை வாய்க்கப் பெறுதோர் கல்வி செல்வம் அதிகாரம் ஆடம்பரவேடம் முதலியவற்றால் எத்துணைப் பெரிய உக்கத நிலையில் வீற்றிருப்போராயினும் அவர் தம் பொய்யுடலில்—மாயக்குரம்பையில்—குரம்பாடும்பையில்—மலமாக்குரம்பையில் மருளுடம்பில் சிவம் விளங்கிற்று என்பது வெற்றுரையே—போலியே—உலக சம்பிரதாயம் நோக்கிய ஒருவகை உபசாரமேயாகும். காயமாயத்தைக் கழிக்கும் திறனறியா இன்னோர் பிணமாகி வீழ்ந்து பிறவிவலைப் படுதலும் கண்கூடு. உன்னதமான இச் சரீரத்தை நிறையுட் புகுத்தும்படி அமலமாக்கும்படி குருநாதன் கருணையால் உரைக்கும் விதிகளை—அநுட்டானங்களை வழுவறத்தாங்கி ஒழுகுபவர் மாட்டே சத்துவமாகிய சிவம் பொலியும், அஃதாவது இக்காயம் அசுத்தம் நீங்கி—பாசம் நீங்கி மெய்யாதற்கேற்ற—நிலைபெறுதற்கேற்ற நித்தியத்துவநிறை உளதாகும் என்பது. இதனால் அநித்தியத்துவ நிறை நீங்கி இருவினையும் கெட்டு—சமப்பட்டு—திரிந்து பாசங்கள் பற்றுக்கள் எல்லாம் அற்றுவிடும். வாய்மையான மோன சமாதி கைகூடும். பிரணவ மந்திர சரீரம் உளதாகும். இதுவே பஞ்சாக்கர தேகம். இச்சரீரம் தரிசனத்துக்கேயன்றிப் பரிசனத்துக்குப் புலப்படாது. மண்ணினால் மூடப்படமாட்டாது. நீரினால் நனைக்கப்பட மாட்டாது. நெருப்பினால் எரிக்கப்பட மாட்டாது. காற்றினால் அசைக்கப்படமாட்டாது. நிழற் சாயையின்றி விளங்கும் "சாயா புருடனைப் போல" என்பது திருயந்திரம் (விசுவக்கிராசம் செ. 1.) "மாணமது மிம் மனித்தரைப்போல வடிவு மாத்திரமே தோன்றி" என்பது சுத்தசாதகம் (செ. 81) இவ்வடிவமே உலகு கண்டு போற்ற மறைதற்குரியது. இந்நிலை கைவரப் பெறுதோர் அசுத்த தநுக்கள்—மருளுடம்புகள்பிணமாகிவீழ்ந்துமண்ணுக்கும் நெருப்புக்கும் விருந்தாதல் திண்ணம்—கண்கூடு. பின்வரும் திருமூலர் திருவாக்குக்கள் ஈண்டு நோக்கற்பாலன.

திருமந்திரம்.

மூன்று மடக்குடைப்பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிழ் முட்டை யிரண்டையுங் கட்டி
[யிட்
டேன்றி யிருக்க உடலழி யாதே.
(ஷை 3-ம் தந். சரீரசித்தியுபாயம் செ. 5.)

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோபு ரவாசற்
றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்
[கம்
கள்ளப் புலனைந்துங் காளாமணி விளக்கே
(ஷை 7-ம் தந். சிவபூசை செ. 1.)

ஆமா றிற்சிவ னாருள் பெற்றுளோர்
போமலந் தன்னாற் புகழ்விந்து நாதம் விட்
டோமய மாகி யொடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வவத்தைத் தொழிலே.
(ஷை 8-ம் தந். கேவலசகலசுத்தம் செ. 7.)

தானவ னாகுஞ் சமாதிகை கூடினா
லான மலமறு மப்பசுத் தன்மைபோ
மீனமில் காய மிருக்கு மிருநிலத்
தூனங்க ளெட்டு மொழித்தொன்று வோர்
[கட்கே.
(ஷை 8-ம் தந். நின்மலாவத்தை செ. 17.)

உண்மைச் சத்துவமே சிவம். சத்துவம் சிவம் அமல நிறை என்பன ஒன்றே. சத்துவம்இன்ன துஎன அறிவது மிகக்கடினம். சிலர் கோபம் முதலிய குணங்கள் வெளியே தோன்றாவாறு ! அவற்றை அடக்கிக் கொள்வதே சத்துவம் என்பர். வேறு பல வகையாகவும் கூறுவர். உண்மை அறியாதார் வேறு என்செய்வர்? லௌகிக தந்திரமாகிய சத்துவம் மௌனம் என்பன போலியாகும். ஒருவன் தனக்கு முன்னிலைகளால் வரும் துன்பங்களை நீக்கிக் கொள்ளுதற் பொருட்டுக் கோபம் முதலிய குணங்களை ஒருவாறு அடக்கிக்கொண்டு அவை இல்லாதவன் போல நடக்க வேண்டியது ஒரு தந்திரமாயினும், இது நித்தியத்துவ நிறையை ஆக்கமுறுவிக்கும் உண்மைச் சத்துவமாகாது. சில காரணங்களால் சில குணங்கள் வெளியே தோன்றப் பெறுதாரை அவை முற்றாக நீங்கப்பெற்ற சத்துவர்— சீவன் முத்தர் எனக் கருதிப் பெரியவர்; சாது, சாமியார் அடிகள் எனக் கூறுவது உலக சம்பிரதாயம் நோக்கிய ஒருவகை உபசாரமே. சில காரணங்களால் மறைந்திருக்கும் குணங்கள் ஏற்ற காரணம் வாய்த்த விடத்துப் பாமர மாக்களிடத்துக் காணப்படுவதினும் பன்மடங்கு அதிகமாக அச்சாமியாரிடத்தே தோன்றி அவர்க்கும் பிறர்க்கும் தீமை விளைத்தலைக் காணலாம். ஆதலால் ஒரு குணம் வெளியே தோன்றப்பெறும் ஒருவன் அதற்கு இனமாகிய ஏனைய குணங்களையும் பூரணமாக உடையவனே என்பதில் ஐயமில்லை. கோபம் முதலியவற்றிற்குக் காரணமாய்ச் சரீரத்துள்ள அசுத்த நிறை நீங்கப்பெற்றவரே — புலாற்றுருத்தி பூந்துருத்தியாக மாற்றப் பெற்றவரே உண்மைச் சத்துவராவர்.

(தொடரும்)

பழைய பைபில்பிரதி.

லக்ஷம் பவுன் விலை.

சோவியத் கவர்மெண்டிடமிருந்து 4-வது நூற்றாண்டைச் சேர்ந்த பழைய பைபில் கையெழுத்துப்பிரதியை விலை கொடுத்து வாங்க பிரிட்டிஷ் மியூஸியம் நிர்வாகிகள் கவர்ன்மெண்டின் அங்கீகாரத்துடன் முடிவு செய்திருக்கிறார்கள். முதல் முதல் இப்பிரதி, ஸார்சக்ரவர்த்தியிடமிருந்ததாம். இதை வாங்குவதற்குப் பொதுஜனங்கள் எவ்வளவு கொடுக்கிறார்களோ அவ்வளவு கவர்ண்மெண்டாலும் கொடுக்கப்படும் என காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி கூறினார். இந்த கையெழுத்துப் பிரதியை வாங்க 10000 பவுன் வேண்டும்.

Sandhanam Printing Works, Pondicherry. Le Gérant R. Nagarattinam.